# தமிழ்ப் பெண் எழுத்துகளின் வரலாறு (1901-1950)

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்படும்

முனைவர் பட்டத்திற்கான

ஆய்வுச்சுருக்கம்

ஆய்வாளர்

**இரெ. மிதிலா**

தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

மெரினா வளாகம்

சென்னை - 6000 005

ஆகஸ்ட் 2007

தமிழ்ச்சூழலில் 1990களுக்குப்பின் மிகப்பரவலாக முன்னெடுக்கப்படுகின்ற இரு பொருண்மைகள் பெண்ணியமும் தலித்தியமும் ஆகும். உரிமை கோரியும் விடுதலை நோக்கியும் செயற்படுபவை இவை. மேலை நாடுகளில் பெண்கள் சமூகப் பொருளாதாரக் காரணங்களால் வெளியுலக வாழ்வில் பங்கேற்க முற்பட்டபோது, பாரம்பரியமாக இருந்த சமூக உறவுகள் மாற்றி யமைக்கப்பட்டன. பெண்கள் தங்களது ஒடுக்கப்பட்ட நிலையை உணர்ந்து போராடத் தொடங்கினர். இதன்மூலம் பெண்ணியச்சிந்தனைகள் தோற்றங்கொண்டன. இந்தியாவிலும் பெண்ணியம் பரவியது. பெண்ணியம் குறித்த சொல்லாடல்கள் தமிழ்ச்சூழலிலும் முன்னெடுக்கப்பட்டன. 1990களில் பெண்ணியம் முக்கியப் புலங்களுள் ஒன்றானது. இருபதாம் நூற்றாண்டைக் கடந்து இருபத்தோராம் நூற்றாண்டில் கால் பதித்துள்ள இவ்வேளையில் கடந்த நூற்றாண்டின் மீதான ஒரு மீள்பார்வை அது பற்றிய புரிதலை உள்வாங்குவதற்கு அடிப்படையாகிறது. கடந்து சென்ற நூற்றாண்டில் அறிவியல், அரசியல், சமூகம், பொருளாதாரம், கலை, இலக்கியம் எனப் பல தளங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தப் பின்புலத்தில்தான் இலக்கியப் பரப்பில் பெண்களின் பங்களிப்பு குறித்த ஆவணத்திற்கும் ஆய்விற்குமான தேவை உருப்பெறுகின்றது.

தமிழ் இலக்கியப் பரப்பின் இரண்டாயிரம் ஆண்டுக் கால வரலாற்றில் பெண்களுக்கான இடமும் அவர்களுடைய இலக்கிய வெளிப்பாடும் மிகக் குறுகியதாகவே இருந்துள்ளது. சங்க இலக்கியம் தவிர்த்து, விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே பெண்களின் பங்கு தமிழிலக்கியத்தில் பதிவாகியுள்ளது. அதன் பிறகு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் பெண் எழுத்துகளின் பதிவுகள் கிடைக்கின்றன. ஐரோப்பியக் கல்வி, பரவலாகத் தொடங்கிய சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் ஆகியவற்றால் பெண்ணுரிமை, பெண் கல்வி ஆகிய சித்தாந்தங்கள் மெல்ல உருக்கொண்டன. ஐரோப்பியர் வருகையாலும் அதனைத் தொடர்ந்த கிறித்தவ மதத் தலையீட்டாலும் தொடர்ந்து கலை, இலக்கியம், அரசியல் உட்பட பல துறைகளிலும் பெண்கள் கால் பதிக்கத் தொடங்கினர்.

இங்ஙனம் பல துறைகள் சார்ந்தும் அதிலும் குறிப்பாக இலக்கியத் துறையில், செயல்படத் தொடங்கிய பெண்களைப் பற்றிய தரவுகள் சேகரிக்கப்படவில்லை. இந்திய விடுதலைக்குப் பின்னான காலகட்டத்தில் பெண்கள் பலர் படைப்பாளர்கள் என்று அடையாளப் படுத்தப்படும் அளவிற்கு முந்தைய காலகட்டத்தில் அறியப்படவில்லை. ஒப்பீட்டு நிலையில் பார்க்கையில் பெண்களின் பங்கைப் பதிவு செய்வதில், பேசுவதில் மௌனம் நிலவியதையே உணரமுடிகிறது.

இருபதாம் நூற்றாண்டை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப் படுவதால், அதன் முற்பாதியில் இலக்கியப் புலத்தில் இயங்கிய பெண்கள் குறித்த தரவுகள் மூலம் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க இலக்கியப்போக்கு புனைகதையைச் (Fiction) சார்ந்தே செயல்பட்டது. அச்சு ஊடகம், உரைநடை வளர்ச்சி, இதழ்களின் பெருக்கம் ஆகியவற்றால் செய்யுள் வடிவம் அருகிப் புனைகதை வடிவம் தமிழில் மலரத் தொடங்கியது. புதினமும் சிறுகதையும் முக்கியப் புனைகதை வடிவங்களாயின, இதழைச் சார்ந்து இவை பல்கிப் பெருகின. இதழ்களின் பெருக்கத்தால் எழுந்த வாசகத் தேவையால், கதை வடிவத்தில் தொடர்கதை என்னும் வடிவமும் உருவானது.

மேலைத் தாக்கத்தால் தமிழில் உருவான புனைகதை வடிவங்கள் இங்குள்ள படைப்பாளர்களாலும் கைக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு வடிவத்தின் முதல் முயற்சியும் ஆண்களால் மேற்கொள்ளப்பட்டுப் பின்னரே பெண்களால் கைக்கொள்ளப்பட்டன. இந்நிலையில், புனைகதை வடிவங்களையும் புனைவு அல்லாத (Non-Fiction) வடிவங்களையும் கையாண்டவர்களாகப் பெண்களெவரும் அதிகம் குறிக்கப்பெறவில்லை. 1950க்குப் பின்னர், வெகுசனத் தளத்தில் பல பெண் எழுத்தாளர்கள் தொடர்கதை வடிவத்தால் பரவலாக அறியப்பெற்றாலும் 1950களுக்கு முன்னர் எழுதியவர்கள் பற்றிய பதிவும் மதிப்பீடும் (வை. மு. கோதைநாயகி அம்மாள் போன்ற ஓரிருவர் தவிர) முழுமையாக உருப்பெறவில்லை என்பதே இவ்வாய்வின் கருதுகோள். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயங்கிய பெண்களைப் பற்றிய தரவுகள் சரிவர வகைதொகை செய்யப்படாமையே இதற்குக் காரணம் எனலாம்.

புதின இலக்கியத்தைப் பொறுத்தவரையில் தமிழில் அதன் முதல் முயற்சி ஆண்களால் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே. அதேபோல் முதன்முதலில் புதினம் எழுதிய பெண் யார் என்பது தமிழ்ப் புதின வரலாற்றில் குறிக்கப் பெறவில்லை. புதின இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு கூறும் ஆய்வு நூல்களிலும் பெண் படைப்பாளர்கள் பற்றிய தரவுகள் கொடுக்கப்பட்டாலும் அவற்றுக்கான மூலம் சரிவர குறிக்கப்படவில்லை. இதனால் தரவுகளின் நம்பகத்தன்மை குறையும் வாய்ப்புள்ளது.

சிறுகதை வடிவத்திற்கு முதன்மை கொடுத்ததாகச் சொல்லப்படும் மணிக்கொடி (1933-1937) இதழுக்கு முன்பும் அதன் சமகாலத்திலும் வெளிவந்த *லக்ஷ்மி* (1923), *சிந்தாமணி* (1924), *மாதர் மறுமணம்* (1936), *கிரஹலக்ஷ்மி* (1937) ஆகிய இதழ்களிலும் பெண்கள் சிறுகதை எழுதி யிருப்பினும் மணிக்கொடியில் எழுதியோர் பெற்ற கவனத்தைப் பிறர் அதிகம் பெறவில்லை.

பெண் எழுத்தைப் பொறுத்தவரையில், தமிழிலக்கியப் புலத்தில் நிலவும் இடைவெளியைப் போக்குவதற்கு ஆங்காங்கே சிதறிக் கிடப்பவற்றை ஒன்றுசேர்ப்பதும் அறியப்படாது இருப்பவற்றை வெளிக்கொணர்ந்து கால வரிசையில் தொகுத்துக் கொடுப்பதும் உதவும். இப்பணியின் முழுமையை (முழுமைக்கு நெருக்கமான நிலையை) அடையத் துணைபுரியும் இந்த ஆவணங்களின் உதவியோடு, தமிழ்ப் பெண் எழுத்துகளின் வரலாற்றை இயன்ற அளவு கட்டமைக்கலாம். இது நம்பகத்தன்மை உடையதாயும் அதன்மூலம் விரிவான பிற்கால ஆய்வுகளுக்கு அடித்தளமாயும் அமைய வாய்ப்புண்டு.

**ஆய்வு எல்லை**

1901-1950 வரையிலான காலகட்டத்தில் தமிழகப் பரப்பில் வெளியான, தமிழ் மொழியில் வெளிவந்த இதழ்களிலிருந்து கிடைக்கின்ற, பெண்களால் எழுதப்பட்ட கதை, கட்டுரை முதலிய அனைத்து எழுத்து வகைக

ளும் இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாகும். அவற்றின் அடிப்படையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்படு கின்றது.

இக்காலகட்டத்தில் நிறைய இதழ்கள் வெளிவந்துள்ளன. அவை அனைத்தும் இங்கு ஆய்வுக்கு எடுத்து க்கொள்ளப்படவில்லை. இதழ்கள் பொதுவாகப் பருவ அடிப்படையில் வெளிவருவன. நாளேடுகளையும் வார இ தழ்களையும் எடுத்துக்கொண்டால் அவை முடிவற்றுச் செல்லும், அவற்றைப் பாதுகாத்து வைப்பதும் கடினம். எ னவே, மாத இதழ்களின் தரவுகள் மட்டுமே இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. விதிவிலக்காக, பெரி தும் பேசப்பட்ட மணிக்கொடி, சுதேசமித்திரன் ஆகிய மாதமொருமுறை அல்லாத (மாதமிருமுறை) இதழ்களிலிரு ந்தும் சில தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சில பெண் எழுத்தாளர்களின் எழுத்துப் பணியையும் பங்களிப்பையும் மதிப்பிடும் பொருட்டு அவர்களின் அச்சு நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை துணைமை ஆதாரங்களாகின்றன.

**ஆய்வு முறை**

ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியினுள் (1901-1950) வெளிவந்த தமிழ் இதழ்களிலிருந்து திரட்டிய தரவு களின் அடிப்படையில் தமிழ்ப் பெண் எழுத்துகளின் வரலாற்றைக் கண்டறிய முற்படும் இவ்வாய்வு, வரலாற்று முறைத் திறனாய்வையும் பெண்மையத் திறனாய்வையும் ஆய்வு முறைமைகளாகக் கைக்கொண்டமைகின்றது.

**ஆய்வேட்டின் அமைப்பு**

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதிகம் அறியப்பட்டிராத, தமிழ் இதழ்களில் எழுதிய பெண்களி ன் எழுத்துகளை வரலாற்று ரீதியில் ஆவணப்படுத்தி, ஆராயும் இவ்வாய்வு ஐந்து இயல்களில் அமைகின்றது. பெ ண்கள் அச்சு ஊடகத்தில் செயல்பட்ட விதத்தை வரலாற்றுப்பூர்வமாக ஆராய்வதை ஒரு பகுதியாகவும் இதழ்க ளில் பெண்கள் எழுதியவற்றை ஆராய்வதை ஒரு பகுதியாகவும் கொண்டு இவ்வாய்வேடு அமைகின்றது. அதன் படி, முதல் பகுதியில் பெண்களுக்கும் அச்சு ஊடகத்திற்குமான ஊடாட்டங்கள் முதல் இயலிலும், இதழ்களுக்கு ஆசிரியராக இருந்து அவற்றைப் பொறுப்பேற்று நடத்திய பெண் எழுத்தாளர்களைக் குறித்து இரண்டாம் இயலிலு ம், பெண் எழுத்தாளர்கள் மீதான கருத்துகள், மதிப்பீடுகள் பற்றி மூன்றாம் இயலிலுமாகப் பகுத்து ஆராயப்படுகி ன்றன. இரண்டாம் பகுதியில் இதழ்களில் வெளிவந்த பெண் எழுத்துகளின் வடிவங்கள் நான்காம் இயலிலும் பெ ண் எழுத்துகளின் பொருண்மைகள் ஐந்தாவது இயலிலுமாக ஆய்வு செய்யப்படுகின்றன.

**இயல் ஒன்று - பெண்களும் அச்சு ஊடகமும்**

இவ்வியலில் அச்சு ஊடகத்தின் ஓர் அங்கமான இதழ்களில் பெண்கள் எவ்விதம் ஊடாடுகின்றனர் என்பது ஆய்வு செய்யப் படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியா முழுவதிலும், தமிழ்நாட் டையும் சேர்த்து, கல்வியும் எழுத்தறிவும் பரவிக்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அச்சு ஊடகத்தின் அறிமுகம ானது வெகுசனத் தொடர்பில் பெரிய மாற்றம் ஏற்பட வழிவகுத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசு தகவல் களுக்காகச் சிறிய அளவில் தொடங்கிய இதழ்கள், இருபதாம் நூற்றாண்டில் ஜனநாயகத் தன்மை பெற்றுப் பொ துமக்களுடன் ஊடாடத் தொடங்கின. இந்தப் பின்புலத்தில் எழுத்தறிவும் கல்வியும் வாய்க்கப் பெற்ற பெண்கள் அச்சு ஊடகத்தில் ஊடுருவுவதும் வாசக நிலையிலிருந்து எழுத்தாளராகவும் இதழாசிரியராகவும் படிப்படியாகப் ப ரிணாமம் பெற்றதும் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

**இயல் இரண்டு - பெண் எழுத்தாளர்களும் இதழ் ஆட்சிமையும்**

இவ்வியலில், 1901-1950 காலப் பகுதியில் இதழாசிரியர்களாக இருந்த பெண் எழுத்தாளர்கள் ஐவரின் பங்களிப்பு குறித்துப் பேசப்படுகின்றது. *ஹிதகாரிணி* ஆசிரியராக இருந்த *பண்டிதை விசாலாட்சி அம்மாள், சிந்தாமணி* ஆசிரியர் *சகோதரி வி. பாலம்மாள்*, *ஜகன்மோகினி* இதழாசிரியரான *வை. மு. கோதைநாயகி அம்மாள், மாதர் மறுமணம்* இதழின் ஆசிரிய ரான *மு. மரகதவல்லி*, *மங்கை* இதழின் ஆசிரியரான குகப்ரியை ஆகியோர் செய்த இதழ்ப் பணிகள் பற்றியும் அதைச் சார்ந்த அவர்களின் எழுத்துப் பணிகள் பற்றியும் இவ்வியல் ஆராய்கின்றது.

**இயல் மூன்று - பெண் எழுத்தாளர்கள் பற்றிய மதிப்பீடுகள்**

இவ்வியலில், ஆய்வு மேற்கொள்ளப்படும் காலகட்டத்தின் பெண் எழுத்தாளர்களைப் பற்றியும் அவர்கள் மேற்கொண்ட எழுத்துப் பணிகளையும் எழுத்து சார்ந்த பணிகளைப் பற்றியும் எழுந்த கருத்துகளும் மதிப்பீடுகளும் பதிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. சக பெண் எழுத்தாளர்களுக்கு இடையிலான பகிர்வுகள் பற்றிய பதிவுகளும் இவ்வியலில் சுட்டப்படுகின்றன. இது அவர்கள் மீதான ஒரு மறைமுகமான அங்கீகாரமாகவும் அதன் விளைவாக ஒரு மதிப்பீடாகவும் உருவாவதை இவ்விடத்தில் இணைத்து நோக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

**இயல் நான்கு - பெண் எழுத்துகளின் வடிவங்கள்**

1901-1950 வரையிலான காலகட்டத்தில் வெளிவந்த இதழ்களிலிருந்து சேகரித்த தரவுகளின் மூலம் கிடைக்கப்பெறும் பெண் எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு வடிவம், உள்ளடக்கம் என்ற வகையில் பகுத்துப் பார்க்கையில், வடிவத்தின் அடிப்படையில் அவற்றைக் கீழ்க்காணுமாறு வகுக்கலாம்.

01. செய்யுள்

02. நாடகம்

03. கதை - தொன்மம்/ சிறுவர் கதைகள்

04. தொடர்கதை

05. சிறுகதை

06. கட்டுரை

07. உரையாடல்

08. குறிப்புகள் - (சமையல்/வீடு/ அழகு/ தையல்/ உடல்நலம்)

09. உரைமொழிகள், துணுக்குகள்

10. விடுகதை

11. கேள்வி-பதில் & கடிதம்

**இயல் ஐந்து - பெண் எழுத்துகளின் பொருண்மைகள்**

பெண் எழுத்தாளர்கள் இதழ்களில் எழுதியுள்ளவற்றின் பொருண்மையை அதாவது உள்ளடக்கத்தை எடுத்துக்கொண்டால், அவை பல பொருள்களைப் பேசுகின்றன. அவை பெண் தொடர்பானவை என்றும் பொதுவானவை என்றும் பகுக்கப்படுகின்றன.

பெண் தொடர்பான பொருள்களாகப் பேசப்படுவன - பெண் கல்வி, பெண் சுதந்திரம், பெண்களின் திருமணம், வரதட்சிணை , பெண்களின் சொத்துரிமை, பெண்களும் அரசியலும், விதவைப் பெண்கள், தேவதாசி முறையை ஒழித்தல், ஆகியவை.

பொதுவான பொருள்களாகப் பேசப்படுவன - கலைகள், அறிவியல், இலக்கியம், கடவுள் நம்பிக்கையை வெளிப்படுத்துவன, மேற்கத்திய நாகரிக வெறுப்பு, உடல்நலம், சுதந்திரத் தாக்கம், திரைப்பட விமர்சனம் ஆகியவை.

இறுதியாக, ஆய்வு மதிப்பீடு இடம்பெறுகின்றது. துணைநூற்பட்டியலும் பின்னிணைப்பும் இணைக்கப்பட்டுள்ளன.